தினதந்தி 04/04/2019

கோவை மாவட்டத்தில்

# தேர்தல் பணியாற்றுபவர்கள் 7-ந் தேதி தபால் ஓட்டு போட ஏற்பாடு

## பயிற்சி வகுப்பின்போது வாக்குச்சீட்டுகள் வினியோகம்

கோவை, ஏப்.4–

கோவை மாவட்டத்தில் தேர்தல் பணியாற்றுபவர்களுக்கு வருகிற 7–ந் தேதி நடக்கும் பயிற்சி வகுப்பின்போது தபால் ஓட்டுகள் போட ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

**தபால் ஓட்டுகள்**

நாடாளுமன்ற தேர்தல் வருகிற 18–ந் தேதி (வியாழக்கிழமை) நடக்கிறது. இதையொட்டி கோவை மாவட்டத்தில் தேர்தல் பணியில் 14 ஆயிரத்து 850 அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இவர்கள் தவிர போலீசாரும் தேர்தல் பணியில் ஈடுபடுகிறார்கள்.

வாக்குப்பதிவு தினத்தில் அவர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுவார்கள் என்பதால் வாக்களிக்க முடியாது. இதனால் தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்களுக்கு தபால் ஓட்டுகள் வினியோகிக்கப்படுவதுவழக்கம். அதன்படி தேர்தலுக்கு முன்பாக அவர்கள் ஓட்டு போட ஏற்பாடு செய்யப்படும்.

இந்த நிலையில் கோவை மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்களுக்கு வருகிற 7–ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) பயிற்சி வகுப்புகள் நடக்கின்றன. பயிற்சி வகுப்புகள் முடிந்த பின்னர் அரசு ஊழியர்கள் தபால் ஓட்டு போட ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இதற்காக பயிற்சி வகுப்புகள் நடக்கும் மையங்களில் வாக்குச்சாவடிகள் போன்று அமைக்கப்பட்டு இருக்கும்.

அரசு ஊழியர்கள் தபால் ஓட்டுகளை பெற்று அங்கேயே வாக்குச்சீட்டில் முத்திரை பதித்து அங்கு வைக்கப்பட்டுள்ள ஓட்டுப்பெட்டியில் தபால் ஓட்டுகளை போடலாம். அல்லது தபால் ஓட்டுகளை வாங்கி வீட்டுக்கு கொண்டு சென்று அதன்பின்னர் படிவங்களை நிரப்பி தபால் ஓட்டுகளை கலெக்டர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடலாம்.

**வாக்குச்சீட்டில் முத்திரை**

இதுகுறித்து தேர்தல் பிரிவு அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

தேர்தல் பயிற்சியில் ஈடுபடுபவர்களுக்கான பயிற்சி வகுப்பு வருகிற 7–ந் தேதி நடக்கிறது. அப்போது அரசு ஊழியர்கள் தபால் ஓட்டு போடுவார்கள். மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் வாக்குச்சீட்டு எப்படி இருக்குமோ அதுபோன்று தபால் ஓட்டுகள் இருக்கும். அதை பெறும் அரசு ஊழியர்கள் பயிற்சி வகுப்பு அறையில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி அறையில் வாக்குச்சீட்டில் முத்திரை குத்தி வாக்களிப்பார்கள். இதற்கான வாக்குச்சீட்டுகள் தயார் நிலையில் உள்ளன.

தபால் ஓட்டுகள் போடுபவர்கள் அந்த நாடாளுமன்ற தொகுதிக்குள் வசிப்பவர்கள் என்றால் அவர்கள் படிவம் 12–ம், வேறொரு நாடாளுமன்ற தொகுதிக்குள் வசிப்பவர்கள் என்றால் படிவம் 12ஏ–ம் பூர்த்தி செய்து பதிவு பெற்ற (கெஜட்டட்) அதிகாரியிடம் கையெழுத்து வாங்கி, வாக்குச்சீட்டில் முத்திரை பதித்தும் தபால் ஓட்டுகளை போடலாம்.

இந்த வாக்குப்பதிவை பார்ப்பதற்காக தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்படும். இதற்காக அனைத்து வேட்பாளர்களுக்கும் தனியாக கடிதங்கள் அனுப்பப்பட்டு உள்ளன. அவர்கள் தபால் ஓட்டுகள் பதிவு செய்யப்படுவதை பார்வையிடுவார்கள். வாக்குச்சாவடிகளில் ஓட்டுப்பதிவு ஏற்பாடுகள் எப்படி செய்யப்பட்டு உள்ளதோ அதுபோன்ற ஏற்பாடுகள் அங்கு செய்யப்பட்டு இருக்கின்றன.

**போலீசாருக்கும் வினியோகம்**

இதேபோன்று தேர்தல் பணியில் ஈடுபடும் போலீசாருக்கும் தபால் ஓட்டுகள் வழங்கப்படும். அவர்களுக்கு வருகிற 9 அல்லது 10–ந் தேதிகளில் தபால் ஓட்டுகள் வினியோகிக்கப்படும். அவற்றை பெறும் போலீசார் அன்றே வாக்குப்பதிவு செய்யலாம். அல்லது வாக்குச்சீட்டை வீட்டுக்கு கொண்டு சென்று அதன்பின்னர் போலீஸ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் தபால் ஓட்டுகளை போடலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.